மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் சாம்பவர் வடகரையில் இயங்கி வந்த அரசு மருந்தகத்தை செப்டம்பர் திங்கள் 1986-ல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

தலைமைச் செயலக வளாகத்தில் உணவு விடுதி.

52—(*வினா எண். 4384)—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலக வளாகத்திற்குள் தரமான உணவு விடுதி அமைக்க அரசு திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தலைமைச் செயலகத்தில் உணவு விடுதிகள் வேண்டப்படுவதில்லை. சிற்றுண்டி விடுதிகளே தேவைப்படுகின்றன. அவை தற்போது உள்ளன என்பதால் வேறு உணவு விடுதிகள் புதிதாக அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே அமைந்திருக்கிற சிற்றுண்டி விடுதி குறிப்பிட்ட நேரத்திற்கு திறக்கப்படுவதே இல்லை. தரமான உணவு வழங்கப்படுவதும் இல்லை. சில அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருக்கும் அறையிலேயே ஸ்கூட்டரில் வந்து விடுகிறார்கள். அந்த ஆபத்தை தடுப்பதற்கும் தரமான உணவு வழங்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மிக அவசரமாக இருக்கிற காரணத்தால் ஸ்கூட்டரிலேயே வந்து சாப்பிட்டு விட்டு போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இங்கே ஏறத்தாழ 13 சிற்றுண்டி விடுதிகள் இருக்கின்றன. இந்த 13 சிற்றுண்டி விடுதிகள் போதும் என்ற காரணத்தால் தனியாக உணவகம் தேவையில்லை என்று சொன்னேன். அதை முறைப்படுத்த வேண்டுமானால் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கலாம்.

1987 மார்ச் 4]

திரு. வி. பி. சிந்தன் : அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பொது ஜனங்களுக்கும் தொழிலாளர்களுக்கும்—போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ஊழியர்களுக்கு நல்ல உணவு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அது தலைமை அலுவலகத்திற்கும் செய்யப்பட வேண்டியதுதானே. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்தைப் பார்த்தால் உணவகமாக இல்லாமல், சிற்றுண்டி விடுதிகள் மட்டும் அமைந்திருக்கிறதோ என்ற எண்ணம் இருக்கிற காரணத்தாலே அதை தெளிவுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது தலைமைச் செயலகத்தில் வைத்திருக்கிற உணவு விடுதிகளைப் பொறுத்தது. இங்கே வருகிற தொழிலாளர்களுக்கு ஏற்பதான் அவை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இங்கே 13 சிற்றுண்டி விடுதிகள் இருக்கின்றன. தனியாக உணவு விடுதியும் தேவையில்லை என்று உணரப்படுகிறது. அதைத்தான் குறிப்பிட்டேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 13 சிற்றுண்டி விடுதிகள் இந்த வளாகத்தில் இருப்பதாக தெரிவித்தார்கள். அதிலே உணவு விடுதி என்று ஒன்று கூட இல்லை. இப்போது பேரவையை காலை 10லிருந்து மதியம் 2 மணிவரை என்று வைத்திருக்கிறோம். சில நேரங்களிலே கால் மணி நேரம் தாமதமாகச் சென்றால் அங்கே ஒன்றுமே கிடைக்க வாய்ப்பு இல்லை. அத்தோடு சில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் நேரத்தில் சாப்பிடாவிட்டால் அதனால் பல நோய்களுக்கு ஆளாகும் உடல் நிலை இருக்கிறது. இதையெல்லாம் யோசித்துப் பார்த்து ஒரு தரமான உணவு விடுதியை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இங்கே 13 சிற்றுண்டி விடுதிகள் இருக்கின்றன. அவற்றில் எல்லா விதமான தரமான உணவுகள் கிடைப்பதாகத்தான் தெரிகிறது. பிரியாணி முதற் கொண்டு கிடைக்கிறது. அப்படி இருக்கும்போது தனியாக ஒரு உணவகம் தேவைதானா என்று யோசிக்க வேண்டி இருக்கிறது. சட்டமன்ற விடுதிக்குள்ளேயே ஒரு உணவகம் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே என்று இருக்கிற காரணத்தால் நீங்களே சொல்லி நீங்கள் வருகிற நேரத்தில் இருக்கும்படி எடுத்து வைக்கச் சொல்லலாம். நீங்கள் அங்கு போய் சாப்பிட ஆரம்பித்தால் அவர்களும் எடுத்து வைப்பார்கள், உணவும் தரமானதாக ஆகிவிடும். பெரும்பாலும் சாப்பிடுவது இல்லை என்ற காரணத்தால்தான் அவர்கள் எடுத்து வைப்பதில்லை. இல்லையென்றால் எடுத்து வைத்திருப்பார்கள். எனவே அந்த முறையை உறுப்பினர்கள் கடைப்பிடித்தால் நல்லது. அதுதானே தவிர, சட்டமன்ற நேரத்திற்கு மட்டும் ஒரு உணவு விடுதியை திறப்பது என்பது சரியாக இருக்காது.

திரு. க. சோலைராசு: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்ற வளாகத்தில் சுற்றுலாத் துறை மூலமாக உணவுப் பொட்டலங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொடுக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் தரமாக இருந்தது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவதற்கு வசதியில்லாமல், நின்றுகொண்டு சாப்பிட வேண்டிய நிலை உள்ளது. எனவே, தற்காலிகமாக உட்கார்ந்து கொண்டு உணவு அருந்துவதற்கான வசதியை ஏற்பாடு செய்து தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தரமான உணவு கொடுக்கப்பட்டது என்று சொன்னால், அதுவே நல்ல விளம்பரமாக அமைந்திருக்கிறது. திரு. சோலைராசு அவர்கள் சொல்லியதை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். இடப் பற்றாக்குறை இருப்பதினால், நின்று கொண்டு சாப்பிடுகின்ற முறையில் வைத்திருக்கிறார்கள். உட்கார்ந்து கொண்டு சாப்பிடக்கூடிய வசதியை செய்து கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்கலாம். இந்த 13 சிற்றுண்டிகளை நானே நேரில் பார்த்து என்னென்ன மாற்றங்கள் செய்தால் பொருத்தமாக இருக்குமோ, அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கலாம்.

அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி.

53—*(வினா எண். 9302) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் 1978—க்குப் பின் சேர்ந்த தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் 1978-க்குப் பின் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS